Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.336 /2020 Date:15.07.2026
Deposition of witness for prosecution: PW6 ( LW9 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சிவக்குமார் | Village | சுருளிபட்டி |
| Father/ Husband Name | முருகேசன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 42 /2026 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 15.07.2026. TIME AM/ **PM**

1, 2–வது எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது சுருளிபட்டியில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். கடந்த 04.01.2018 ம் தேதி காலை 07.30 மணியளவில் சுருளிபட்டியில் உள்ள டீ கடையில் அருகே போலிசார் சண்டை வழக்கு குறித்து, படம் வரைந்து, நேரில் வந்த விசாரணை செய்ததற்கு சாட்சியாக என்னிடமும், மாதவன் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் பார்வை மகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விாசரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்த போது எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்யவில்லை. காவல் துறையினருக்கு சுரேஷ் என்பவரின் வீட்டை அடையாளம் காண்பித்தேன். நான் சுரேஷ் என்பவரின் வீட்டிற்கு எதிரே குடியிருந்து வருகிறேன். நான் அடையாளம் காண்பித்த வீடு சுரேஷ் வீடு ஆகும். சுரேஷ் என்பவரின் தகப்பனார் பக்கத்து தெருவில் குடியிருந்து வருகிறார். சம்பவ நடைபெற்ற இடம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுரேஷ் என்பவருடன் நான் வேலைக்கு செல்வது வழக்கம். காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, சுரேஷ் என்பவர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 336/2020 Date:15.07.2026
Deposition of witness for prosecution: PW7 ( LW11 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முத்துபாண்டி | Village | திண்டுக்கல் |
| Father/ Husband Name | வீரராஜ் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 42 /2026 | Calling | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 15.07.2026. TIME 12.55 **PM**

1, 2–வது எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2018–ம் தேதி நான் இராயப்பன்பட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, அதிகாலை 02.00 மணிக்கு தேனி க.விலக்கு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த சுரேஷ் த/பெ. வேலுசாமி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப குற்ற எண் 44/18 இதச பிரிவு 294(b), 506(ii) and 4 of TNTCEI Act –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அன்றைய தினமே 07.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவக்குமார், மாதவன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வைமகஜர் தயார் செய்து பின்னர் சாட்சிகளான வேலுச்சாமி, திருப்பதி, குமார், முருகன், சன்னாசி, கருத்தமுத்தையா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்று 14.10 மணிக்கு சுருளிபட்டி– பிள்ளையார் கோவில் பஸ்நிறுத்தம் அருகே 1–வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 2–வது எதிரி முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அவர்களை விசாரணை செய்து காயச்சான்று பெற்றேன். 10.02.2018–ம் தேதி எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்த பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, பார்வை மகஜர் அசா.ஆ.4, வரைபடம் அ.சா.ஆ.5, விபத்து பதிவேடு அ.சா.ஆ. 6 ஆகும்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1)** அ.சா.1 னினை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற நபரின் விபரம் முதல் தவவல் அறிக்கையில் உள்ளபடி என்னவென்றால் ராமர் என்பவர் ஆவார். மேற்படி ராமர் என்பவரை சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். குமார், முருகன், சரவணன் ஆகியோர்கள் அசா.1–னினை மருத்துவமனையில் சேர்த்ததாக சொன்னார் என்றால் சரியல்ல. அ.சா.2–க்கு எவ்வாறு தகவல் கிடைத்தது என்று எனது விசாரணையில் சொன்னார் என்றால் தான்

வீட்டிற்குள் இருந்த போது சத்தம் கேட்டு வெளிய வந்து பார்த்ததாக சொன்னார். சம்பவமானது அ.சா.1 வீட்டிற்கு முன்பு நடைபெற்றதா அல்லது அ.சா.2 வீட்டிற்கு முன்பு நடைபெற்றதா என்றால் அ.சா.1 வீட்டிற்கு முன்பு நடைபெற்றது எனது விசாரணையில் சொல்லப்பட்டது.

2) அ.சா.2 வீட்டிற்கு முன்பாக சம்பவம் நடைபெற்றதாக அ.சா.1 சொன்னால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சிகளான முருகன், குமார் சம்பவ பற்றி தங்களுக்கு தெரியாது என சொல்லியுள்ளார் என்றால் எனது விசாரணையில் சொல்லவில்லை. புகாரில் வட்டி மற்றும் முதலுடன் சேர்த்து ரூ.7 லட்சம் கொடுக்கப்பட வேண்டும் என எதிரிகள் மிரட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரிகள் கந்துவட்டிக்கு பணம் கொடுப்பதாக என்னிடம் ஆவணம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரிகள் வட்டிக்கு பணம் கொடுத்தது குறித்து ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கந்துவட்டி தொடர்பாக சாட்சிகள் உள்ளது, ஆனால் ஆவணங்கள் இல்லை. சாட்சிகள் சுரேஷ், சரிதா, வேலுச்சாமி, திருப்பதி, சன்னாசி ஆகியோர்கள் எதிரிகள் கந்துவட்டிக்கு பணம் கொடுத்திருப்பதாக எனது விசாரணையில் சொன்னார். மேற்படி சாட்சிகள் இதச பிரிவு 294(b) கீழான குற்றத்திற்கு சாட்சியம் அளித்தார்களா கந்துவட்டிக்கு சாட்சியம் அளித்தார்களா என்றால் 3 க்கும் சேர்த்து தான் சாட்சியம் அளித்தார். சுரேஷ் என்பவரின் மனைவி சரிதா என்றாலும் சுரேஷ் என்பவரின் தகப்பனார் வேலுச்சாமி என்றாலும் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ நடைபெறவில்லை என்றாலும் சாட்சிகள் சரிதா மற்றும் வேலுசாமி, சுரேஷ் என்பவரின் குடும்பத்தார்கள் என்பதால் பொய் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

3) அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த கம்பம் அரசு மருத்துமவனை மருத்துவர் மற்றும் தேனி காவிக்கு அரசு மருத்துவமனை மருத்தவர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் சரிதான். புகாரில் எந்த வகையான விஷம் சாப்பிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சுருளிபட்டி ஆந்தங்கரை ஓரம் அரளி விதை என குறிப்பிடப்பட்டுள்ளது. அரளி விதை சாப்பிட்ட இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் பார்வையிட்டேன், ஆனால் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை. அரளி விதை சாப்பிட்ட இடத்தை குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் ஆந்தங்கரையில் அரளி விதை சாப்பிடவில்லை என்பதால் தான் அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் கந்துவட்டிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் அசா.1 எதிரிகளிடம் கந்துவட்டிக்கு பணம் வாங்கவில்லை என்றாலும் அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலத்தினை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.